[திரு. சி.வி. சண்முகம்] [2020 செப்டம்பர் 16

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/ 2020) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*

(அஆ) தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020), மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*